மாலைமலர் epaper

Mallai malarePaper

*Copyright © 2009 Mallaimalar.*

# நகரம்



சேலம் சோனா தொழில்நுட்ப கல்லூரி சார்பில் சுதந்திரதினவிழா கொண்டாடப்பட்ட காட்சி.




தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரி சார்பில் சுதந்திரதினவிழா கொண்டாடப்பட்ட காட்சி.

## சோனா கல்லூரி - தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில்

# சுதந்திர தின விழா

சேலம், ஆக.16—
சேலம் சோனா

துறைத்தலைவர்கள்,
ஆசிரியர்கள் மற்றும்

தொழில்நுட்ப கல்லூரி சார்பில் சுதந்திரதினவிழா கொண்டாடப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் உஷா கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவ, மாணவிகளின் கண்கவர் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்த விழாவில் மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தியாகராஜர் பாலிடெக்னிக்

சேலம், தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியில் **70** வது சுதந்திர தின விழா கடந்த **8**–ந்தேதி முதல் **15**–ந்தேதி வரை ஒரு வார காலம் கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப்போட்டி, சுதந்திரத்தைப் பற்றிய நாடகப் போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. கடந்த **12**–ந்தேதி சேலத்திற்கு மகாத்மா காந்தியடிகள் வந்து தங்கிய முக்கிய நினைவிடமாக கருதப்படும் அஸ்தம்பட்டியில் உள்ள தபால் நிலையத்தை மாணவர்கள் பார்வை யிட்டனர்.

மேலும், சுதந்திரப் போராட்ட தியாகிகளை நினைவு கூறும் வகையில் மெழுகுவர்த்தி ஏந்தி நடைப்பயணம் **14**–ந்தேதி அன்று இரவு **6.30** மணிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் வீ.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. சுதந்திர தின விழாவன்று கல்லூரியின் முதல்வர். வீ.கார்த்திகேயன் கலந்து கொண்டு தேசியக்கொடியை ஏற்றி வைத்து சுதந்திரதினவிழா உரையாற்றி போட்டிகளில் வெற்றி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

**70** –வது சுதந்திர தினத்தை சமுதாயத்திற்கு உணர்த்தும் வகையிலும் சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரவிக்கும் வகையிலும் முனைவர் வீ.கார்த்திகேயன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சுதந்திர தின ஓட்டம் காலை **9** மணி அளவில் தியாகராஜர் பாலிடெக்னிக் கல்லூரியிலிருந்து புறப்பட்டு சேலம் ஜங்சன் சென்று திரும்பினார்கள், மற்றும் சுதந்திர தினத்தை ொட்டி மரக்கன்றுகள் கல்லூரி வளாகத்தில் நடப்பட்டது.

"